**தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்**
**8–வது கீழ் தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை 600 015**

இணையதளம்: www.forests.tn.gov.in தொலைபேசி எண். 044–2434 1251

**நேரடி நியமனம் மூலம் வனக்காவலர் பணியிடம் நிரப்புவதற்கான தேர்வு நடைபெறுவது குறித்து வெளியிடப்பட்ட கால அட்டவணையினை ஒத்திவைத்தல் குறித்தான அறிவிக்கை**

1. தமிழ்நாடு வனச்சீருடைப்பணியாளர்கள் தேர்வுக்குழுமம் விளம்பர எண்.1/2019 மற்றும் அறிவிக்கை 1/2019 நாள் 07.03.2019ன் படி தமிழ்நாடு வனச்சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள வனக்காவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் செய்வதற்கான இணையவழி தேர்வு குறித்து அறிவிக்கை வெளிடப்பட்டது. இந்த அறிவிக்கையில் பத்தி எண்.6(அ)–ன் மூலம் இணையவழி தேர்வு குறித்தான உத்தேசமான கால அட்டவணையில் விண்ணப்பம் செய்வதற்குரிய ஆரம்ப நாள் மே–2019 முதல் வாரம் என அறிவிக்கப்பட்டது.

2. நிர்வாகக் காரணங்களினால் மேற்காண் அறிவிக்கையில் உத்தேசமாக குறிப்பிடப்பட்ட தேர்வு கால அட்டவணை இதன்மூலம் ஒத்திவைக்கப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது. திருத்திய தேர்வு கால அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும்.

3. திருத்திய கால அட்டவணை குறித்தான அறிவிப்பு இணையதளம் வாயிலாக பெருமளவில் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அறிவிப்பு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் தேர்வு ஒத்திவைத்தல் அறிவிக்கை குறித்து அச்சமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாள்: 11.05.2019

உறுப்பினர் செயலர் (கூ.பொ)
தநாவசீபதேகு